[1993 ஏப்ரல் 19

396—

நாமக்கல்லிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

*11065—திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நாமக்கல்லில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற திட்டம் அரசிடத்திலே உண்டு.

(ஆ) 1994-ம் ஆண்டு ஜனவரியில், லத்துவாடியில் புதிதாக ஒரு குளிரூட்டும் நிலையம் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிட வேலை முடிந்தவுடன் தற்போது நாமக்கல்லில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் பால் குளிரூட்டும் நிலையம் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படும்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பால் குளிரூட்டும் நிலையமானது நாமக்கல்லில் இருந்து மோகனூர் சாலையில் என்னுடைய ஊர் கொண்டிசெட்டிப்பட்டியில் சாலை ஓரத்தில் அமைந்துள்ளது. பால் சில்லிங் செய்துவிட்டு அதிலிருந்து வேஸ்டேஜ் மில்க்கும் மற்றும் கழிவுப்பாலும் வருகின்ற நேரத்தில் அந்தக் கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய நாய்கள் அனைத்தும் அந்த இடத்தில் கூடி அந்தப் பாலைக் குடித்துவிட்டு கூட்டம் கூட்டமாக நிற்கின்றன. கல்நடைக் கல்லூரிக்கும், அரசு கலைக் கல்லூரிக்கும், சேலம் சர்க்கரை ஆலைக்கும் செல்லக்கூடிய வாகனங்கள் தினந்தோறும் 2, 3 நாய்களை அடித்துவிட்டு சென்று விடுகின்றன. இதனால் மிகவும் மோசமாக துர்நாற்றம் அந்த இடத்தில் ஏற்படுகின்ற காரணத்தால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

1993 ஏப்ரல் 19]

திருமதி ப. சரஸ்வதி : மிக விரைவில் அந்தக் குளிரூட்டும் நிலையத்தை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3-வது பால்பெருக்குத் திட்டத்தில் தேசிய பால்வள வாரியத்தின் நிதி ஒதுக்கப்பட்டு, 95.59 லட்சம் அளவிலே அந்தக் கட்டிடம் இப்பொழுது கட்டி முடிக்கப்பட இருக்கிறது. இத்திட்டம் 1994 ஜனவரியில் முடியும். முடிந்த உடனே அதை மாற்றி அங்கு கொண்டு போவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 397, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

397—

தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் பட்டப்படிப்புகள்.

* 10161—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தால் 1987-ஆம் ஆண்டு முதல் நடத்தப்படும் Bachelor of Labour Management, Master of Labour Management ஆகிய பட்டப்படிப்புகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தொழிற் கல்வியாக அங்கீகரிக்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்தப் பட்டப் படிப்புகளை தொழிற் கல்வியாக அங்கீகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். பட்டப் படிப்புகளை அங்கீகரிக்க தேர்வாணையம் இசைவளித்துள்ளது அது தொடர்பாக விதிகளைத் திருத்தம் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.